அதிக கோரிக்கைகள் வந்த வண்ணம் உள்ளதால், திருப்பணி செய்யப்படும் இத்தகைய கிராமப்புற திருக்கோயில்களின் எண்ணிக்கை 2,000 ஆக உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்திற்கு நடப்பாண்டில் திருக்கோயில் நிதியிலிருந்து 20 கோடி ரூபாய் செலவிடப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஈ) ஆதி திராவிடர் நல விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அம்மா அவர்களின் அரசின் சார்பாக, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேலும் மேம்படுத்தும் வகையில், கீழ்க்காணும் அறிவிப்பினை இந்த மாமன்றத்தில் வெளியிடுகின்றேன்:

தமிழகத்தில் தற்பொழுது இத்துறையின்கீழ், 1,324 ஆதி திராவிடர் நல விடுதிகளும், 42 பழங்குடியினர் விடுதிகளும், 314 அரசு பழங்குடியினர் உண்டு, உறைவிடப் பள்ளிகளும் இயங்கி வருகின்றன. தமிழக அரசு எடுத்துவரும் பல்வேறு நடவடிக்கைகளின் பயனாக, பள்ளிகளில் இடை நிற்றல் கணிசமாகக் குறைந்துள்ளது. அதன் தொடர்ச்சியாக, நடப்பாண்டில் வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் 11 ஆதி திராவிடர் நல விடுதிகளுக்கு 13 கோடியே 87 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(உ) மெட்ரோ இரயில் திட்டத்தின் நான்காவது வழித்தடத்தினை பூந்தமல்லி வரை நீட்டித்தல், கோயம்புத்தூரில் மெட்ரோ இரயில் திட்டம் செயல்படுத்துதல், மலை மற்றும் வனப் பகுதிகளில் வாழும் மலைவாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த திட்டம் தீட்டுதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் அம்மா அவர்களின் அரசின் சார்பாக திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை சார்ந்த கீழ்க்காணும் அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் வெளியிடுகிறேன்: